வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 23.02.2026 திங்கட்கிழமை | இதழ் : 49 | பக்கங்கள் : 08

## எதிர்ப்புக்கு மத்தியிலும் நாமல் லண்டன் பயணம்!

கொழும்பு, பெப். 23

இங்கிலாந்தில் எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்ட போதும், பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இங்கிலாந்துக்கு பயணமாகியுள்ளார்.

லண்டன் பௌத்த விஹாரையின் 100ஆவது ஆண்டு நிறைவை பூர்த்தி செய்யும் நிகழ்வை முன்னிட்டு அவர் தனது இங்கிலாந்து பயணத்தைத் தொடங்கியுள்ளார்.

முன்னதாக, அவரது வருகைக்கு எதிராக திட்டமிடப்பட்ட போராட்டங்கள் காரணமாக, அவரது உரை ரத்து செய்யப்பட்டதாக கேம்பிரிட்ஜ் ஒன்றியம் தெரிவித்ததாக நாமலின் அலுவலகம் அறிவித்திருந்தது.

07



### வடக்கில் மாகாண சபை நிர்வாகத்துக்குள்


## ஆளும் தரப்பு எம்.பிக்களுக்கு பொறுப்பு பகிர்ந்தளிக்கும் சட்டவிரோத நடவடிக்கையை ஆளுநர் கைவிடவேண்டும்!

### ஜனநாயக த.தே.கூ மாநாட்டில் பிரகடனம்

யாழ்ப்பாணம், பெப். 23

பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நிர்வாக ரீதியாகதவோ, அரசியலமைப்பு ரீதியாகவோ நேரடிச் சம்பந்தமில்லாத மாகாணசபை நிர்வாகத்துக்குள், ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை உள்வாங்கி கல்வி, சுகாதாரம், விவசாயம், உள்ளூராட்சி ஆகிய துறைகளில் பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கும் சட்ட விரோத நடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் உடனடியாகக் கைவிட வேண்டும்

07



## நம்பிக்கைக்குரிய நண்பன் இந்தியா!

### ரில்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, பெப். 23


இந்தியாவை ஒரு நம்பிக்கைக்குரிய நண்பராகவும், பங்குதாரராகவும் தான் கருதுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இந்திய ஊடகமொன்று வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார் என, கொழும்பு

07

## இந்திய திட்டங்களில் தாமதம் ஏன்?

### அநுரவிடம் கேள்வி எழுப்பினார் மோடி



கொழும்பு, பெப். 23

புதுடில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பக் கண்காட்சியின் ஒரு பகுதியாக, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போது, இலங்கையில் நடைபெற்று வரும்

07

## எரிவாயு கப்பல் நேற்று நாட்டை வந்தடைந்தது!

கொழும்பு, பெப். 23


மூவாயிரத்து 700 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் நேற்று முற்பகல் நாட்டை வந்தடைந்துள்ளது.

குறித்த கப்பலில் கொண்டுவரப்பட்டுள்ள ஷ

07

## மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் வழிபாடுகளுக்கு இராணுவத்தினர் தடை!

### இவ்வருட திருவிழாவுக்கும் அனுமதியில்லை



யாழ்ப்பாணம், பெப். 23

மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு, இராணுவத்தால் பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.

மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. அந்த

07

## உரிமைக்காக குரல் கொடுக்கவேண்டிய தமிழ்த் தலைமைகள் சுயநலப்போக்கில்!

### தவக்கால சுற்றுமடலில் யாழ்.ஆயர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், பெப். 23

ஒற்றுமையாக ஒன்றிணைந்து தமிழர் உரிமைக்காக குரல் கொடுக்கவேண்டிய எம் தலைமைகள் சுயநலப்போக்குக் கொண்டவர்களாகப் பிளவுபட்டுள்ளமை ஓர் துர்ப்பாக்கிய நிலை. சமூக நலன் விரும்பிகளும், புத்திஜீவிகளும் தமிழ்த் தலைமைகளுக்குள் ஒற்றுமையை உருவாக்க முயல வேண்டியது கட்டாயத் தேவையாகும் என யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம்

07

## சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகம் அமைக்கப்படும்

### அதற்கான வரைவு ஏப்ரலில் வெளியாகும்

கொழும்பு, பெப். 23

சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்துக்கான வரைவு எதிர்வரும் ஏப்ரலில் வெளியிடப்படுமென நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

07

## ஜனநாயகத்தை முடக்கியவர்களுக்கு தேர்தல் பற்றி பேச அருகதை இல்லை!

### அமைச்சர் வசந்த கூறுகிறார்

கொழும்பு, பெப். 23

மாகாண சபைத் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் நீண்டகாலமாகத் தடுத்து நிறுத்தியவர்களே இன்று தேர்தலை நடத்துமாறு சவால் விடுவது வேடிக்கையானது என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த காலங்களில் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் தள்ளிப்போட்டு, ஜனநாயகத்தை முடக்கியவர்கள் யார் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். ரோஹித அபேகுணவர்தன

07

## அரசியல் கைதிகள் விவகாரம்; விரைவில் அடுத்த கட்ட நகர்வு

கொழும்பு, பெப். 23

நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் அவர்களது தண்டனைக் காலத்தைக் குறைப்பது தொடர்பில், விசேட அறிக்கைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசு வழங்கிய வாக்குறுதியின்படி, அரசியல் கைதிகள் இதுவரை விடுவிக்கப்படாமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு


07

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகளும் அரசியல் மயப்படவேண்டும்

### ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் அழைப்பு



யாழ்ப்பாணம், பெப். 23

2009 ஆம் ஆண்டு யுத்தம் மௌனித்த பின் புனர் வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளின் தொடர் பிரச்னைகளுக்கு முக்கிய காரணம் என்னவென்றால் போராளிகள் இன்னும் முழுமையாக அரசியல் மயப்படவில்லை என்பதே. அதனால் முன்னாள் போராளிகள் அரசியல் மயப்படவேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சி தலைவர் சி.வேந்தன் அழைப்பு விடுவித்துள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேராளர் மாநாடு நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் அங்கத்துவம் வகிக்கும் அணைத்து இயக்கங்களும் அரசியல் மயப்படுத்தப்பட்ட பின்னரே அவர்களுக்கான அடக்குமுறைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்னைகள் ஓரளவு முடிவுக்கு வந்துள்ளன.

அதே போல் 12000 இற்கு மேற்பட்ட புனர்வாழ்வு பெற்ற போராளிகள் வடக்கு - கிழக்கு முழுவதும் காணப்படுகின்றனர்.

ஆனாலும் அவர்கள் மீது பல அரசியல் அடக்குமுறைகள் மற்றும் புலனாய்வு துறையினரின் பின் தொடரும் தன்மைகள் தொடர்ந்து கொண்டுள்ளன.

இதனை நிறைவுக்கு கொண்டு வர அனைவரும் ஒன்றுணைந்து தமக்கான ஒரு அரசியல் பிரதிநிதித்துவத்தை உருவாக்கவேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தை முழுமையாக தந்துள்ளது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியே ஆகும்.

பல கட்சிகளில் பல முன்னாள் போராளிகள் இருந்தாலும் அவர்கள் இன்னொருவருக்கான அரசியல் அங்கிகாரத்துக்காக செயற்பட்டு வருகின்றனர்.

அனைத்து புனர்வாழ்வு பெற்ற போராளிகளும் ஓரணியில் திரண்டு தமக்கான பிரச்னைகளை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் - என்றார். (அ)

# கொக்குவில் இந்து மாணவர்கள் அனுமதியில் சுற்றறிக்கை மீறல்!

### மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி இடைநிலை மாணவர் அனுமதியின்போது கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளை மீறும் வகையில் மாணவர் அனுமதி இடம்பெற்றமை முதற் கட்ட விசாரணைகளில் அவதானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

குறித்த பாடசாலையில் மாணவர் அனுமதி தொடர்பாக பெற்றோர் ஒருவரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

குறித்த பாடசாலை இடைநிலை மாணவர் ஒருவரின் பாடசாலை அனுமதி தொடர்பில் பெற்றோரால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்ட போது இடைநிலை மாணவர்களுக்கான கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகளை மீறும் வகையில் பாடசாலை அதிபர் செயற்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த விடயம் தொடர்பில் வலயக்கல்வி அலுவலகத்திடம் விளக்கம் கேட்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகள் தொடர்ந்து இடம்பெறும் - என்றார்.(அ-05)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் உதவி



யாழ்ப்பாணம், பெப். 23

வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பதுளை மாவட்டம் அப்புத்தளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள தம்பேத்தன்ன தோட்டம் பகுதியில் அமைந்துள்ள சிறீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக, 425,000 ரூபா பெறுமதியான பெயின்ற் வகைகள் ஆலய நிர்வாகத்திடம் நேற்று சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டன.

இவ் உதவியை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார்.

இதேவேளை, சந்நிதியான் ஆச்சிரமத்தால் அநுராதபுரம் கெக்கிராவ சிறீ சித்தி விநாயகர் ஆலய கட்டடப் பணிக்காக 100,000 ரூபா நிதியும் ஆலய நிர்வாகத்திடம் நேற்று கையளிக்கப்பட்டது. (அ)

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்க வலியுறுத்தி கிளிநொச்சியில் கையெழுத்து போராட்டம்!

கிளிநொச்சி, பெப். 23

நாட்டில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசு உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை மீளப் பெறவேண்டும் என வலியுறுத்தி நேற்றுக் காலை கிளிநொச்சி பொதுச்சந்தை முன்பாக கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட சிவில் அமைப்புக்களின் ஏற்பாட்டில் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக இந்த கையெழுத்து பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் இதில் கலந்து கொண்டார். (அ)

# 1000 கிலோ கஞ்சா அழிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 23

பருத்தித்துறை நீதிமன்றத்தில் சான்றுப் பொருட்களாக வைக்கப்பட்டிருந்த ஆயிரம் கிலோ கிராம் கஞ்சா தீ வைத்து அழிக்கப்பட்டது.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு சான்றுப் பொருட்களாக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருட்களாக வைக்கப்பட்டிருந்த 1000 கிலோ கிராம் கஞ்சாவே பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் குடத்தனை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தீயிட்டு அழிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரயிலுடன் வாகனம் மோதி இரு இளைஞர்கள் மரணம்!

கொழும்பு, பெப். 23

கரையோர ரயில் மார்க்கத்தில் பயாகலை பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தில் படுகாயமடைந்தவர்களில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று காலை காலியிலிருந்து மருதானை நோக்கிச் சென்ற “காலி குமாரி” விரைவு ரயிலுடன் மோதிய கப் வானத்தில் பயணித்த இருவரே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று காலை இடம்பெற்ற இந்த விபத்தில் பலத்த காயமடைந்த மூவர் களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 22 மற்றும் 28 வயதுடைய இரண்டு இளைஞர்களே உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ரயிலில் மோதியதையடுத்து, குறித்த கப் ரக வாகனம் சுமார் 50 மீற்றர் தூரம் வரை ரயிலால் இழுத்துச் செல்லப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரயில் கடவையில் வர்ண சமிஞ்சை முறைமை சரியாக இயங்கவில்லை எனவும், குறித்த ரயில் கடவையில் முறையான பாதுகாப்பு தடை பொருத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# கொக்காவிலில் விமானப்படையின் சிரமதானப்பணி

கிளிநொச்சி, பெப். 23

இலங்கை விமானப்படையின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி - கொக்காவில் பகுதியில், இரணைமடு விமானப்படையினரின் ஏற்பாட்டில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

ஏ-9 வீதி கொக்காவில் பகுதியில் வீதியின் இருமருங்கிலும் காணப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகள் அகற்றப்பட்டன.

குறித்த சிரமதானப் பணியில் இரணைமடு விமானப்படை கட்டளை அதிகாரி மற்றும் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(அ)

# பாரிய கடத்தல் முறியடிப்பு: இருவர் பொலிஸாரால் கைது

சிலாபம், பெப். 23

பீடி இலைகள், வெளிநாட்டு சிகரெட்கள் மற்றும் சட்டவிரோத விவசாய இரசாயனப் பொருட்கள் அடங்கிய தொகையுடன் சிலாபம், தொடுவாவ பிரதேசத்தில் வைத்து இரண்டு சந்தேக நபர்களை கரையோர பாதுகாப்பு திணைக்களத்தினர் கைது செய்தனர்.

இதன்போது, 25 உறைகளில் அடைக்கப்பட்ட 992 கிலோ 800 கிராம் எடையுள்ள பீடி இலைகள், 1,40,000 வெளிநாட்டு சிகரெட்கள் மற்றும் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட விவசாய இரசாயன பொருட்கள் என்பனவற்றுடன் இரண்டு சந்தேக நபர்கள் மற்றும் ஒரு டிங்கிப் படகு என்பன அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்களின் பெறுமதி 2 கோடி ரூபாய்க்கும் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
23.02.2026 திங்கட்கிழமை

விசுவாவசு வருடம், மாசி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## இந்தியாவும் ரில்வின் சில்வாவும்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளை “மாற்றியமைக்க முடியாத அளவுக்கு மகோன்னதமானவை” என்று அன்றைய வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் வர்ணித்தார். இன்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியாவுடனான உறவுகளில் கடைப்பிடிக்கின்ற அணுகுமுறைகளை வர்ணிப்பதற்கு வார்த்தைகளை தேட வேண்டியிருக்கிறது.

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு (ஜே.வி பி.) சீன கம்யூனிஸ்ட் கட்சியுடன் இருக்கும் அரசியல் நெருக்கம் மற்றும் அதன் இந்திய விரோத கடந்த காலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கிய போது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் எவ்வாறு அமையும் என்பது தொடர்பில் கடுமையான சந்தேகம் இருந்தது.

ஆனால், அதையெல்லாம் பொய்யாக்கி தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தியாவுடன் எவருமே முன்னர் எதிர்பார்க்காத முறையில் சிறந்த உறவுகளைப் பேணி வருகிறது. ஜனாதிபதி திஸாநாயக்கவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் சந்திக்கின்ற வேளைகளில் அவர்களின் உடல் மொழிகளில் கூட இரு நாடுகளுக்கும் இடையிலான இன்றைய நெருக்கம் பிரதிபலிப்பதை காணக் கூடியதாக இருக்கிறது.

இத்தகைய பின்புலத்தில் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா நாடு திரும்பிய பிறகு இரு பத்திரிகைகளுக்கு வழங்கிய நேர்காணலில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் குறித்து தெரிவித்த கருத்துக்கள் கவனத்தை ஈர்ப்பவையாக இருக்கின்றன.

இந்தியாவின் முக்கியமான ஆங்கில தினசரிகளில் ஒன்றான “ தி இந்து“ வின் கொழும்பு செய்தியாளர் மீரா ஸ்ரீனிவாசனுக்கு கடந்த வாரம் வழங்கிய நேர்காணலில் சில்வா, “ஜே.வி.பி. இந்தியாவுக்கு எதிரானது என்று நீண்ட காலமாக நிலவிவரும் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. காலப் போக்கில் எமது நிலைப்பாட்டில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும்” என்று குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, நேற்றைய தினம் அவர் கொழும்பு “சண்டே ரைம்ஸ்” பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் “ஜே.வி.பி. யின் தாபக தலைவர் றோஹண விஜேவீர இந்தியாவுக்கு எதிராக எடுத்த நிலைப்பாட்டை நீங்கள் மாற்றிக் கொண்டுவிட்டீர்களா? “என்ற கேள்விக்கு பதிலளிக்கையில்” இலங்கைக்கு பாதகமாக அமையக்கூடிய கொள்கைகளை கடைப்பிடித்த இந்திய அரசாங்கங்களை நாம் எதிர்த்தோமே தவிர, இந்தியாவை நாம் ஒருபோதும் எதிர்க்கவில்லை” என்று கூறினார்.

ஜனாதிபதி திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் போன்ற தேசிய மக்கள் சக்தியின் தலைவர்கள் போலன்றி தற்போதும் கூட இந்தியாவுடனான அணுகுமுறைகளில் கடுமையான நிலைப்பாடுகளைக் கொண்டவர் என்று கருதப்பட்ட சில்வா முதன் முறையாக இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்திற்கு பிறகு இத்தகைய கருத்துக்களை வெளியிட்டிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது.

ஜே.வி.பி. கடந்த காலத்தில் இந்திய விரோதக் கொள்கைகளைக் கடைப்பிடித்தமைக்கு வரலாற்று ரீதியாக சிங்கள பௌத்த சமூகத்துக்கு இந்தியா தொடர்பில் இருந்து வந்த ஐயுறவுகளுக்கு புறம்பாக, அண்மைய கடந்த காலத்தில் தேசிய இனப்பிரச்சினையில் இந்தியா செய்த தலையீடுகளும் முக்கிய காரணமாகும். ஜே.வி.பி. தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்காக முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் எதிர்த்து நின்ற கசப்பான வரலாற்றைக் கொண்டது.

அதனால், தனது கட்சி இந்தியாவுக்கு எதிரானது என்று நீண்டகாலமாக நிலவிவரும் கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறுகின்ற சில்வாவிடம் இருந்து “இனப்பிரச்சினைக்கு சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவுசெய்யக் கூடிய இணக்கத் தீர்வுகளுக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்கும் எதிரான கட்சியாக ஜே.வி.பி.யை நோக்குகின்ற போக்கையும் மாற்றிக் கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது” என்ற அறிவிப்பு என்றைக்கு வருமோ என்று ஈழநாடு அங்கலாய்ப்புடன் காத்திருக்கிறது.

# மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும்

**சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தல்**

யாழ்ப்பாணம், பெப். 23

இந்திய விஜயத்தின்போது 13 ஆவது திருத்தம் குறித்தோ, அதிகாரப் பகிர்வு குறித்தோ பேசப்படவில்லை என தேசிய மக்கள் சக்தி கூறுவதில் எந்தளவுக்கு உண்மை இருக்கிறது என்று எமக்குத் தெரியாது. ஆனால், இந்தியாவின் வலியுறுத்தலுக்கு அப்பால் மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு இருக்கிறது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப்பகிர்வு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதுபற்றி கருத்துரைத்த சுரேஷ் பிரேமச்சந்திரன், வழமையாக இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்புக்களின்போது அழுத்தமாகவும், அன்றேல் மேலோட்டமாகவேனும் இவ்விடயங்கள் குறித்து இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கும் நிலையில், இம்முறை இதுபற்றி பேசப்படவில்லை என அரசாங்கத்தின் பிரதிநிதிகள் கூறுவது எந்தளவுக்கு உண்மையாக இருக்கக்கூடும்? என சந்தேகம் வெளியிட்டார்.

இதேவேளை, ரில்வின் சில்வாவின் கருத்து தொடர்பில் இந்தியாவே பதிலளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மேலும், இவ்விடயத்தில் இந்தியா அழுத்தங்களை பிரயோகித்தாலும், பிரயோகிக்காவிட்டாலும் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. அதனை விரைந்து நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (எ)

## விமான நிலைய அபிவிருத்தி பணி குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் புதிய கட்டுமானப் பணிகளை நேரில் கண்டறிவதற்காக துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின் போது, தற்போது கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள பயணிகள் முனையக் கட்டடத்தின் நிலை குறித்து ஆராய்ந்த அமைச்சர், 800 சதுர மீற்றருக்கும் அதிக பரப்பளவில் அமைக்கப்பட்டு வரும் புதிய வருகை முனையத்தின் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்துடன், தற்போது பயன்பாட்டிலுள்ள முனையத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் நேரில் சென்ற அவர், அங்குள்ள வசதிகள் மற்றும் தேவைகள் குறித்து விரிவாக கேட்டறிந்தார். (எ)

## எஹெலியகொடையில் 171 மி. மீ. மழை பதிவு

கொழும்பு, பெப். 23

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகூடிய மழை வீழ்ச்சி எஹெலியகொடை பகுதியில் பதிவாகியுள்ளது. இதன்படி, 171 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட வானிலை அதிகாரி மலித் பெர்னாண்டோ, கட்டுகஸ்தொட்டை பகுதியில் 120 மில்லி மீற்றர் மழையும், சப்ரகமுவ, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழையும் பதிவாகியுள்ளதாக தெரிவித்தார்.

வளிமண்டலத் தளம்பல் நிலை காரணமாக நாட்டின் பல பாகங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

இதேவேளை, மாத்தறை முதல் முல்லைத்தீவு வரையான கடற்பிராந்தியங்களில் காற்று மணித்தியாலத்துக்கு 45 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என்பதால் கடற்றொழிலாளர்கள் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கோர விபத்து


கொழும்பு, பெப். 23

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கெலனிகம மற்றும் தொடங்கொடைக்கி டைப்பட்ட பரகஸ்தொட்டை பகுதியில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு கப் ரக வாகனம் மற்றும் இரண்டு கார்கள் மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளதுடன் மூன்று வாகனங்களும் மாத்தறை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்ததாக தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மூவரும் களுத்துறை நாகொடை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 23 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 11
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சப்தமி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. வியாபாரத்தில் புது முதலீடுகளை தவிர்க்கவும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும்.

**இடபம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்து செல்லுங்கள். வாகனம் தொந்தரவு தரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினை வரக்கூடும்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**கடகம்**
உணர்ச்சிப்பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். அலுவலகத்தில்

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனபோர் நீங்கும்.எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி வரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்களை புரிந்து கொள்வார்கள்.

**துலாம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக ஆழமாக முடிப்பீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். கல்யாண பேச்சுவார்த்தை வெற்றியடையும். புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**விருச்சிகம்**
உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர்கள் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். அமோகமான நாள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களை சுற்றி இருப்பவர்கனின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள்.


**மகரம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாரின் உடல்நலத்தில் கவனம் தேவை. மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். தடைகளை தாண்டி வெல்லும் நாள்.


**கும்பம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த மன உளைச்சல் நீங்கி மகிழ்ச்சி கிட்டும். வராது என்று இருந்த பணம் கைக்கு வரும். விலகிச் சென்ற உறவினர்கள் வழிய வந்து பேசுவார்கள்.

### அல்லைப்பிட்டியில் துப்பாக்கிச்சூடு:

# சிறுவனுக்கு நீதி வேண்டி யாழ். நகரில் போராட்டம்




யாழ்ப்பாணம், பெப். 23

அல்லைப்பிட்டி பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான அல்பினோ அருள் பயாஸ் என்ற சிறுவனுக்கு நீதி வேண்டி நேற்றுக்காலை யாழ். மத்திய பேருந்து நிலையப் பகுதியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மனித உரிமை ஆர்வலர் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தில் சிறுவனின் உறவினர்கள், வேலன் சுவாமி, குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் மு. கோமகன், யாழ். மாநகர உறுப்பினர் எஸ். நிசாந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொலிஸாரின் செயலைக் கண்டித்து பல்வேறு சுலோகங்கள் தாங்கி கோசமிட்டு தமது எதிர்ப்பை காட்டிய போராட்டக்காரர்கள் குறித்த கொலைக்கு காரணமான பொலிஸாரை தண்டிக்க வேண்டும் என்றும் இவ்வாறான மிலேச்சத்தனமான கொலைகளை பொலிஸார் இனியொரு தடவை மேற்கொள்ளக் கூடாது என்று வலியுறுத்தியதுடன் நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

கடந்த 10 ஆம் திகதி அதிகாலை 1.15 மணியளவில் வேலணை - அல்லைப்பிட்டிப் பகுதியில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சிறுவன் ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

# "ஜனநாயக போராட்டங்களை ஒடுக்க புதிய பயங்கரவாத தடைச் சட்டம்"

யாழ்ப்பாணம், பெப். 23

போராட்டங்களை கட்டுப்படுத்த பயங்கரவாத தடைச் சட்டத்தில் ஏற்பாடுகள் போதாமையாக இருப்பதனால் தான் பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டத்தில் மக்கள் போராட்டங்களை ஒடுக்கும் ஏற்பாடுகளுடன் அதனைக் கொண்டுவர முயல்கின்றனர் என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச் செயலாளர் குமார் குணரட்னம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக மக்கள் போராடிய போதும், அதனையும் மீறி அந்த சட்டத்தை அமுல்படுத்தினர். பின்னர் அந்த பயங்கரவாத தடைச் சட்டத்தால் தற்போது ஆட்சியில் உள்ளவர்களும் பல இன்னல்களை எதிர்கொண்டனர்.



பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக கூறி, ஆட்சி அமைத்து விட்டு, தற்போது பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டத்தை அமுல்படுத்த முயல்கின்றனர். இது மிகவும் பயங்கரமான சட்டமாக வரவுள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுக்கும் போது, பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தடுக்க முடியாது. அதற்கு அந்த சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் போதாது.எனவே, தற்போது, பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாக்கும் சட்டத்தின் ஊடாக மக்கள் போராட்டங்களை கட்டுப்படுத்த புதிய சட்டமூலத்தை கொண்டு வருகின்றனர்"- என்றார். (எ)

# மன்னாரில் உணவகங்கள் மீது தொடரும் சட்ட நடவடிக்கைகள்

மன்னார், பெப். 23

மன்னார் நகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள உணவகங்கள், தொடர்ச்சியாக பல்வேறு சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை தொடர்ந்து, அடையாளப்படுத்தப்பட்ட சில உணவகங்கள் மீது சுகாதாரத் துறையினர் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வாரம், மன்னார் நகர சபை சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கையின் போது, உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது இயங்கி வந்த 3 உணவகங்கள் மற்றும் ஒரு சிற்றுண்டிச்சாலை மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, மன்னார் தாழ்வுப்பாடு பிரதான வீதி, மருத்துவமனை பகுதியை அண்டியுள்ள இரண்டு உணவகங்கள் மீதும், மன்னார் உப்புக்குளம் மற்றும் பள்ளிமுனை வீதிப் பகுதிகளில் அமைந்துள்ள இரு உணவகங்கள் மீதும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(எ)

# அறநெறி பாடசாலைகள் கோரிக்கையை அனுப்புக

யாழ்ப்பாணம், பெப். 23

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அறநெறி பாடசாலை செயல்பாட்டுக்கான வெளியீடுகள் இதுவரை கிடைக்கப்பெறாத அறநெறி பாடசாலை நிர்வாகத்தினரை, உரிய அறநெறி பாடசாலைகளுக்கான கடிதத்தலைப்பில், இவ்விடயம் தொடர்பான கோரிக்கையை பொறுப்பான உத்தியோகத்தர்கள் மூலமாகவும், பொறுப்பான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாத பிரதேசங்களில் அமைந்துள்ள அறநெறி பாடசாலை நிர்வாகத்தினர் நேரடியாக திணைக்கள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலக்கரி கொள்வனவு மோசடி பற்றி ஆராய்ந்து உரிய சட்ட நடவடிக்கை

## ரணில் - சம்பிக்க திடீர் ஆலோசனை

கொழும்பு, பெப். 23

நிலக்கரி கொள்வனவு மோசடி குறித்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, நிலக்கரி கொள்வனவு மோசடி குறித்து ஆராய்ந்து உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ரணில் விக்கிரமசிங்க, சம்பிக்க ரணவக்கவிடம் அறிவுறுத்தியுள்ளார்.

சம்பிக்க கடந்த 17 ஆம் திகதி இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவில் முன்னிலையாகி நிலக்கரி கொள்வனவில் இடம்பெற்ற மோசடி குறித்து முறைப்பாடளித்துள்ளார். அத்துடன் கொள்வனவு தொடர்பான தகவல்களையும் ஆணைக்குழுவில் சமர்ப்பித்துள்ளார்.

தரமற்ற நிலக்கரி கொள்வனவால் 7,672 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

2026.02.19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் புதிய விநியோகத்தர்களின் கீழ் 08 நிலக்கரி கப்பல்கள் ஊடாக நிலக்கரி கொண்டு வரப்பட்டுள்ளதுடன், இதனால் 7,672 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என இலங்கை மின்சார சபை, பாராளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுவில் குறிப்பிட்டுள்ளதாக சம்பிக்க ரணவக்க கூறினார்.

இந்த ஊழல்- மோசடி தொடர்பில் சம்பிக்க முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய உட்பட அரசியல் கட்சித் தலைவர்கள், அரசியல் பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடி வருகிறார். இதன் தொடர்ச்சியாகவே ரணில் விக்கிரமசிங்கவுடனும் கலந்துரையாடியுள்ளார். (எ)

# ரயிலுடன் மோதிய கப் ரக வாகனம் மூவர் காயம்!

கொழும்பு, பெப். 23

கரையோர ரயில் மார்க்கத்தில் பயாகல பிரதேசத்தில் உள்ள ரயில் கடவையொன்றில் கப் ரக வாகனமொன்று ரயிலுடன் மோதி விபத்தில் சிக்கியது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர். (எ)

# மகாவலி ஆறு பெருக்கெடுப்பு: சோமாவதி வீதி மூடப்பட்டது

கொழும்பு, பெப். 23

மேல் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால் மானம்பிட்டியவில் மகாவலி ஆறு பெருக்கெடுத்து ஓடியதால், லங்காபுர பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சோமாவதி வீதி மூடப்பட்டுள்ளது.

மகாவலி ஆற்றின் நீர்மட்டம் நிரம்பி வழியும் அளவை எட்டியுள்ளதாகவும், சுங்காவில - சோமாவதி வீதியின் சில பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதாகவும், பொதுமக்களின் பாதுகாப்புக்காக அதிகாரிகள் வீதியை மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலநறுவை அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

நாட்டில் மேல் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால் ஆற்றின் ஓட்டம் கணிசமாக அதிகரித்துள்ளமை ஆறு பெருக்கெடுக்கும் நிலைமைக்கு வழிவகுத்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மகாவலி ஆற்றின் இருபுறமும் வசிக்கும் மக்கள் விழிப்புடன் இருக்கவும், நீர் மட்டம் தொடர்ந்து அதிகரித்தால் உத்தியோகபூர்வ அறிவுறுத்தல்களின்படி, செயல்படத் தயாராக இருப்பதாகவும் நீர்ப்பாசனத்திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

வெள்ளப் பெருக்கு குறையும் வரை வாகன சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இளம் பெண் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 23

கல்கிஸ்ஸ, வில்லியம் பிளேஸ் பகுதியில் 110 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபரான பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை பிரதேசத்தை சேர்ந்த 25 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

### பலப்பிட்டிய கொலை வழக்கு:

# இருபது ஆண்டுகளுக்குப் பின் இருவருக்கு மரண தண்டனை

கொழும்பு, பெப். 23

கொலைக் குற்றச்சாட்டில் குற்றவாளிகளாக காணப்பட்ட இருவருக்கு பலப்பிட்டிய உயர் நீதிமன்ற நீதிபதி பிரியந்த லியனகே மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இவர்கள் இருவரும் கடந்த 2005ஆம் ஆண்டு செப்ரெம்பர் 04ஆம் திகதி பலப்பிட்டிய, மதுவ பகுதியில் வைத்து பொரவகமகே மனோஜ் சம்பிக்க குமார என்பவரை வெட்டிக் கொலை செய்தனர்.

சம்பவம் நடந்த போது முதலாம் நபருக்கு 16 வயதும், இரண்டாம் நபருக்கு 30 வயதுமாக இருந்தது. அம்பலாங்கொட, தல்கஸ்கொட பகுதியைச் சேர்ந்த ஓட்டோ சாரதியே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். சுற்றுலா செல்வதாகக் கூறி ஓட்டோவை வாடகைக்கு அமர்த்திய குறித்த நபர்கள், அவரை வெட்டிக்கொலை செய்ததாக பொலிஸார் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தனர். இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி தனது தீர்ப்பில் அறிவித்தார். (எ)

### மரத்துடன் மோதி வாகனம் விபத்து:

# போலந்து சுற்றுலா பயணிகள் நால்வர் மருத்துவமனையில்

கொழும்பு, பெப். 23

வெல்லவாய - எல்ல பிரதான வீதியின் 09 ஆம் கட்டை தபால் நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தில் போலந்து நாட்டு சுற்றுலாப் பயணிகள் நால்வர் காயமடைந்தனர்.

குறித்த வாகனம் வீதியோரம் இருந்த மரம் ஒன்றில் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

காயமடைந்தவர்களில் இரு ஆண்களும் இரு பெண்களும் அடங்குவர்.

காயமடைந்த நால்வரும் வெல்லவாய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# விசேட சுற்றிவளைப்பில் 508 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, பெப். 23

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 508 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 28, 369 பேர் பரிசோதிக்கப்பட்டதுடன், 19 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 325 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 210 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்திய 226 பேரும், கவனக் குறைவாக வாகனம் செலுத்திய 44 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3,681 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு-மாந்தீவு பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம்!



மட்டக்களப்பு, பெப். 23

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குட்பட்ட மாந்தீவு பகுதிக்குள் ஏற்கனவே புகுந்திருந்த காட்டு யானைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பந்துறை பிரதேசத்துக்குள் நுழைந்து அட்டகாசம் புரிந்தன.

கடந்த ஐந்து தினங்களாக தொடர்ந்து அப்பகுதியில் காட்டு யானைகள் உட்புகுந்து நெற்பயிர்கள் மற்றும் ஏனைய பயிர் வகைகளையும் துவம்சம் செய்வதாக அப்பகுதி பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

யானை - மனித மோதலுக்கு நிரந்தரத் தீர்வு இதுவரையில் எட்டப்படவில்லை எனவும் மக்கள் கூறினர்.

இதேவேளை, வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களும், அப்பகுதி பொதுமக்களும் இணைந்து குறித்த காட்டு யானைகளை அப்பகுதிகளிலிருந்து வெளியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

காட்டு யானைகளின் அட்டகாசத்தாலும் நடமாட்டத்தாலும், வழமை போன்று தமது அன்றாடச் செயல்பாடுகளில் ஈடுபட முடியாதுள்ளதாகவும், மிகுந்த அச்சத்தின் மத்தியிலேயே தாம் நடமாடுவதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ)

# ரயில் மோதி விபத்து: இரு இளைஞர்கள் பலி!

கொழும்பு, பெப். 23

காலியிலிருந்து மருதானை நோக்கி சென்ற “காலி குமாரி” விரைவு ரயிலுடன் மோதிய கப் ரக வாகனத்தில் பயணித்த இருவர் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் பலத்த காயமடைந்த மூவர் களுத்துறை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 22 மற்றும் 28 வயதுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தனர் என்று பொலிஸார் கூறினர்.

ரயிலில் மோதியதையடுத்து, குறித்த கப் ரக வாகனம் சுமார் 50 மீற்றர் தூரம் வரை ரயிலால் இழுத்து செல்லப்பட்டிருந்தது.

இந்த ரயில் கடவையில் வர்ண சமிஞ்சை முறைமை சரியாக இயங்கவில்லை எனவும், குறித்த ரயில் கடவையில் முறையான பாதுகாப்பு கடவை பொருத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (எ)

# பதுளையில் மண்சரிவு



பதுளை, பெப். 23

பதுளை மாவட்டத்தில் நிலவி வரும் மழையுடனான சீரற்ற காலநிலையால், நேற்று முந்தினம் இரவு பசறை - பதுளை பிரதான வீதியின் ஆறாம் கட்டைப் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டது. இதன் காரணமாக, வீதியின் ஒருவழிப் பகுதி மண் குவியலால் முழுமையாக மூடப்பட்டு, போக்குவரத்து தற்காலிகமாக தடைப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வீதி அபிவிருத்தி அதிகார சபை பணியாளர்கள் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மண்ணை அகற்றும் பணிகளை முன்னெடுத்தனர். அதனைத் தொடர்ந்து, தடைப்பட்டிருந்த போக்குவரத்து சீர்செய்யப்பட்டு, ஒரு வழிப் பாதையாக மீண்டும் பொதுப் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டுள்ளது. (எ)

# கால்நடைகளால் பெரும் சிரமம்: பிரதேச சபை கடும் எச்சரிக்கை

சம்மாந்துறை, பெப். 23

அம்பாறை, சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலியாக திரியும் மாடுகளால் அன்றாடம் வீதி விபத்துகள் அதிகரித்துள்ளன. இதேவேளை, பொதுச் சொத்துக்கள் மற்றும் பெறுமதியான பயிர் வகைகளும் சேதமடைந்து வருவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பிரதேச சபை தெரிவித்துள்ளது.

பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் வீதிகளில் அலையும் மாடுகள், மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்கள் உடனடியாக அவற்றை தங்களது வீடுகள் அல்லது பண்ணைகளில் கட்டிப் பராமரிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது இறுதி அறிவித்தல் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரதேச சபையால் பிடிக்கப்படும் ஒவ்வொரு மாட்டுக்கும் 10,000 ரூபாய் தண்டப்பணமும், ஒருநாள் பராமரிப்புச் செலவாக 2,000 ரூபாயும் அறவிடப்படும். மூன்று நாட்களுக்குள் உரிய தண்டப்பணத்தை செலுத்தி மாடுகளை மீட்டுக் கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் அவை நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு அரசுடமையாக்கப்பட்டு ஏலத்தில் விற்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (எ)

# மின் கம்பியில் சிக்கி ஒருவர் பலி!

கொழும்பு, பெப். 23

மஹியங்கனை, மெதஓயா பகுதியில் சட்டவிரோதமாக பொருத்தப்பட்ட மின் கம்பியில் சிக்கி நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

விவசாய நடவடிக்கைகளுக்காக தனது வயலில் இருந்தபோது, அந்தப் பகுதி முழுவதும் இழுக்கப்பட்டிருந்த அங்கீகரிக்கப்படாத கம்பியில் அவர் சிக்குண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விலங்குகளால் பயிர்களுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்க இந்த சட்டவிரோத மின்கம்பி அமைக்கப்பட்டதாக அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

கம்பியை பொருத்தியதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான நபருக்கு மறியல்

அம்பாறை, பெப். 23

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 139 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளை 1000 ரூபாய்க்கு விற்பனை செய்தமை மற்றும் 310 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளை தன்வசம் வைத்திருந்தமை ஆகிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டார். குறித்த நபரை நேற்று முன்தினம் சனிக்கிழமை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (எ)

# கண்டி உட்பட 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 23

தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக 4 மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கண்டி மாவட்டம்: யட்டிநுவரை, தொழுவ, உடுதும்பரை, கங்க இஹல கோரளை,

கேகாலை மாவட்டம்: யட்டியாந்தோட்டை, கேகாலை, தெஹியோவிட்ட, அரநாயக்க, மாவனல்லை,

மாத்தளை மாவட்டம்: இரத்தோட்டை, அம்பகமுவ கோரளை, லக்கல பல்லேகம, வில்கமுவ, உக்குவளை,

இரத்தினபுரி மாவட்டம்: இரத்தினபுரி.

இதேவேளை,

பதுளை மாவட்டம்: ஹல்துமுல்லை,

நுவரெலியா மாவட்டம்: நில்தண்டஹின்ன, வலப்பனை,

இரத்தினபுரி மாவட்டம்: அயகம, கிரியெல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு இரண்டாம் கட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# பாலத்திலிருந்து பாய்ந்த கப் ரக வாகனம்

மொனராகலை, பெப். 23

மொனராகலை - பொத்துவில் பிரதான வீதியில், மொனராகலை நகருக்கு அருகில் கப் ரக வாகனம் ஒன்று பாலத்திலிருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

இருப்பினும், இந்த விபத்தால் குறித்த வாகனத்துக்கும், பாலத்துக்கும், அத்துடன் மொனராகலை நகருக்கு நீரை விநியோகிக்கும் பிரதான குழாய் கட்டமைப்புக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது. (எ)

# மகாவலி கங்கை பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை

கொழும்பு, பெப். 23

நீர்ப்பாசன திணைக்களத்தின் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினால் மகாவலி கங்கை பள்ளத்தாக்கு பகுதிகளுக்கான முதலாம் இலக்க வெள்ள அபாய எச்சரிக்கை நேற்றுக்காலை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கையானது இன்று நள்ளிரவு 12. 00 மணி வரை அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாவலி கங்கையின் சில நீரேந்துப் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய்து வரும் மழைவீழ்ச்சி காரணமாக, அடுத்த 24 மணித்தியாலங்களுக்குள் மகாவலி கங்கையை அண்டிய தாழ்நிலப் பகுதிகளில் சிறு வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை,

கிண்ணியா, மூதூர், சேருவில, வெலிகந்த, லங்காபுர, தமன்கடுவ, திம்புலாகல ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளும் தரப்பு...

எனவும் ஆளுநரின் இச் செயற்பாடு மாகாணசபை நிர்வாகத்தைச் சிறுமைப்படுத்தும் செயற்பாடாகுமெனவும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று சாவகச்சேரியில் நடைபெற்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேராளர் மாநாட்டுப் பிரகடனத்திலேயே ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேராளர் மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்தப் பேராளர் மாநாட்டில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைத் தலைவர்கள், பங்காளிக் கட்சி உறுப்பினர்கள், கட்சியின் மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் போது வெளியிடப்பட்ட 15 அம்சங்களை உள்ளடக்கிய மாநாட்டுப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் சுருக்கமான விபரம் வருமாறு :

- புதிய அரசியல் சாசனமானது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் தமிழ் மக்கள் தமது பூர்வீக வாழ்விடப் பிரதேசத்தில் ஒரு சுயாட்சியை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், சமஷ்டி அரசியல்

அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டத்தின் நியாயத்தினைப் புரிந்து, தமிழ் மக்கள் விரும்புகின்ற, எதிர்பார்க்கின்ற சமஷ்டி முறையை ஏற்படுத்த வேண்டும்.

- வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகங்கள் ஆளுங்கட்சி சார் நிர்வாகங்களாக மாற்றப்படுகின்றன. இவ்வாறான விகிதாசார முறைப்படி மாகாண தேர்தல்களை நடாத்தி மக்கள் பிரதிநிதிகளிடம் நிர்வாகம் கையளிக்கப்பட வேண்டும்.

- பயங்கரவாத தடைச் சட்டம் இல்லாதொழிக்கப்படுவதுடன், அதற்குப் பிரதியீடாக எவ்வித சட்டமும் இந்நாட்டுக்கு தேவையில்லை.

- இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு நடத்திய இன அழிப்பு, போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பன்னாட்டு நீதித்துறைக் கட்டமைப்புக்கூடாக முழுமையாகவும் முறையாகவும் விசாரிக்கப்பட்டு பரிகார நீதி வழங்கப்படுவதுடன், இன அழிப்புச் செயற்பாடுகளின் மீள்நிகழாமை உறுதி செய்ய வேண்டும்.

- சிறைகளில் மிக நீண்டகாலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் தமது எஞ்சிய காலத்தினையாவது அமைதியும் சமாதானமும் நிறைந்த சூழலில் வாழ நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் உறவுகளுக்கான நீதி வழங்கப்பட வேண்டும்.

- இந்திய இழுவை மடிப் படகுகளாலும், உள்ளூர் இழுவை மடித் தொழிலாலும், சட்டவிரோதமான மீன்பிடி முறைகளாலும், படைத்தரப்புகளின் ஆக்கிரமிப்புகளாலும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- நிர்ணயிக்கப்பட்ட விலையில் முழு நெல்லையும் கொள்வனவு செய்ய அரசாங்கம் முழுமையான நிதியை உரிய நிறுவனங்களுக்கு விடுவிக்க வேண்டும்.

- பழந்தமிழ்க் கிராமங்கள் சிங்களக் குடியேற்றங்களாக்கப்படுவதற்கு அடிகோலக் கூடிய "கிவுல் ஓயா" திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும். அத்திட்டத்திற்குப் பதிலாக, அப் பிரதேசத்தில் உள்ள சிறு குளங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக விவசாயத்திற்கு தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

- ஜனாதிபதி உறுதியளித்தபடி, பாதுகாப்பு தரப்பினரால் காணிகள் விடுவிக்கப்படவில்லை. இராணுவக் கட்டுமாணங்கள் தொடர்ந்து பேணப்படுவதுடன், மக்களுக்குரிய நிலங்களில் புதிய கட்டுமாணங்களும் உருவாக்கப்படுகின்றன. உடனடியாக மக்களின் வதிவிடங்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

- சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த கட்டுமானங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான விசாரணைகளை மேற்கொள்க.

- அம்பாறை மாவட்டத்தில், கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவை முழுமையான ஒரு பிரதேச செயலர் பிரிவாகத் தரம் உயர்த்துமாறு அங்குள்ள தமிழ் மக்கள் நான்கு தசாப்தங்களாக தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். கல்முனையில் தமிழர்களுக்குத் தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநீதியை இல்லாது செய்ய உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- "பிரஜா சக்தி" எனும் திட்டம் ஒரு ஜனநாயக விரோத செயற்பாடாகும். பிரஜா சக்தி எனும் ஆளும் கட்சியின் ஜனநாயக விரோத திட்டம் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும்.

- ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை உள்வாங்கி கல்வி, சுகாதாரம், விவசாயம், உள்ளூராட்சி ஆகிய துறைகளில் பொறுப்புகளை பகிர்ந்தளிக்கும் சட்ட விரோத நடவடிக்கையை வடக்கு மாகாண ஆளுநர் கைவிட வேண்டும். (அ)

## எதிர்ப்புக்கு...

இருப்பினும், ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தில் அவர் ஆற்றவிருக்கும் உரையும், இங்கிலாந்தில் உள்ள இலங்கை சமூகத்துடனான பல சந்திப்புகளும் திட்டமிட்டபடி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் கட்சி ஆர்வலர் மிலிந்த ராஜபக்ஷ ஆகியோர் நாமலுடன் இங்கிலாந்துக்கு செல்கின்றனர் . (அ)

## நம்பிக்கைக்குரிய...

ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா தொடர்பான தனது கட்சியின் பழைய நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டிய நேரம் வந்துவிட்டதாகவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக, மக்கள் விடுதலை முன்னணியின், கட்சியின் ஆரம்ப காலத்தில் "இந்திய விரிவாக்கக் கொள்கை" குறித்து ரோஹண விஜேவீர கொண்டிருந்த கடுமையான கருத்துக்கள், ரில்வின் சில்வாவின் இந்தியப் பயணத்துக்குப் பின்னர், மாறியுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

## மயிலிட்டி...

ஆலயத்தில் வருடாந்த திருவிழாத் திருப்பலியை கடந்த 2ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில், அதற்கு அரசாங்கத்திடமும் இராணுவத்திடமும் அனுமதி கோரி மயிலிட்டி மீள்குடியேற்றச் சங்கத்தின் சார்பில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உள்ளிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட பகுதியைப் பார்வையிட்டதுடன், அங்கு வழிபாடுகளை நடத்த அனுமதிக்குமாறு இராணுவத்திடம் கோரிக்கை வைத்திருந்தனர்.

ஆனால், வழிபாடுகளை மேற்கொள்வதற்கு இராணுவத்தால் தடை விதிக்கப்பட்ட நிலையில், இந்த வருட திருவிழாத் திருப்பலி இடம்பெறுவது கேள்விக்குறியாகியுள்ளது

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கும், ஆளுநருக்கும், அமைச்சர் சந்திரசேகருக்கும். மாவட்ட செயலருக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் இராணுவத்தின் நடவடிக்கையில் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தில் திருவிழா வழிபாடுகளை மேற்கொள்வதற்கு யாழ். மறை மாவட்டமும் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதன்போது, ஆலயத்துக்குள் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிக்க முடியாது என்றும், ஆலய வளாகத்துக்கு வெளியில் வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதிப்பதாகவும் இராணுவத்தால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறான முறையில் வழிபாட்டை மேற்கொள்வதற்கு யாழ். ஆயர் இல்லம் மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து மயிலிட்டி காணிக்கை மாதா ஆலயத்தின் இந்த வருட திருவிழா தடைப்பட்டுள்ளது

இதையடுத்துஇ இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## சுயாதீன...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் குற்றவியல் வழக்குகளைக் கையாள்வதற்காக சுயாதீன சுயாதீனு வழக்குத்தொடுநர் எனும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஆரம்ப வரைவுப் பணிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு செய்யப்படும்.

இந்த புதிய கட்டமைப்பானது தற்போதுள்ள சட்டமா அதிபர் திணைக்களத்தை கலைப்பதற்கான முயற்சி அல்ல என்பதை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும்.

சட்டமா அதிபர் தனது தற்போதைய பணிகளைத் தொடர்வார் அதில் எவ்விதமான பிரச்சினைகளும் இருக்காது. எனினும் குற்றவியல் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு ஒரு சுயாதீனமான நிறுவனம் உருவாக்கப்படும்.

அந்த சுயாதீன வழக்குத்தொடுநர் அரசாங்கத்தின் கொள்கைகளால் அன்றி, சாட்சியங்கள் மற்றும் சட்ட ரீதியான காரணிகளால் மட்டுமே வழிநடத்தப்படுவார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் யசந்த கோத்தாகொட தலைமையிலான குழு, சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் நீதிச்சேவை ஆணைக்குழு ஆகியவற்றுடன் இணைந்து, குறித்த கட்டமைப்புக்கான அதிகாரங்கள் தொடர்பிலான ஆய்வுகளும், ஆலோசனைகளும் நடத்தப்படுகின்றன. அக்கட்டமைப்புக்கான ஏப்ரல் மாதம் வரைவு தயாரானதும் அது பொதுமக்களின் கருத்துக்களுக்காக முன்வைக்கப்படும்-என்றார். (அ)

## எரிவாயு...

எரிவாயுவை நேற்றிரவு விநியோகப் பிரிவுக்கு கையளிக்கப்பட்டதாக, லிற்றோ நிறுவனத்தின் தலைவர் சன்ன ஜயவர்தன தெரிவித்தார்.

அதன்படி, நாடளாவிய ரீதியில் இன்று முதல் தொடர்ச்சியாக எரிவாயு கொள்கலன்கள் பகிர்ந்தளிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் எரிவாயு கொள்கலன்களை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியால் மக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்த நிலையில், போதுமான அளவு எரிவாயு கொள்கலன்கள் இன்மையே, எரிவாயு தட்டுப்பாட்டுக்கு காரணம் என விநியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## இந்திய...

இந்தியத் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் தாமதங்கள் குறித்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கேள்வி எழுப்பினார்.

இந்த தகவலை கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகளின்போது இந்தியா நிதியளிக்கும் திட்டங்கள் மற்றும் முதலீடுகள் குறித்து நரேந்திர மோடி விசாரித்தார் என வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்தை கோடிட்டு குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட அழிவைத் தொடர்ந்து கூடுதல் உதவி தேவையா என்பது தொடர்பாகவும், தற்போது நடைபெற்று வரும் திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும் இந்தியப் பிரதமர் இதன்போது கேட்டறிந்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவில் உள்ள அரசு நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான தொழில்நுட்பங்கள் குறித்த அறிவு பரிமாற்றம் குறித்தும் இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த விடயத்திலும் உதவுவதாக இந்தியா உறுதியளித்ததாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (அ)

## உரிமைக்காக...

ஆண்டகை சுட்டிக்காட்டியுள்ளார்.

2026 ஆண்டுக்கான தவக்கால சுற்றுமடலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சமகால அரசினால் மக்களுக்கு உறுதிமொழிகளுக்கு மேல் உறுதி மொழிகள் வழங்கப்படுகின்றனவே தவிர, எவையும் செயற்படுத்தப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

யாழ்.ஆயரின் சுற்றுமடலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

எமது பிரதேசத்தில் இளையோரை இலக்கு வைத்து போதைப் பொருட்களை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் குறிப்பாக கத்தோலிக்கர்கள் செறிவாக வாழும் கரையோரப் பிரதேசங்கள் ஊடாக வியாபாரம் வியாபித்து வருவது வேதனைக்குரிய விடயம்.

நாம் பொறுப்புள்ள விதத்தில் இத்தீமைகளுக்கு அடிமையானோருக்கு மறுவாழ்வும், விற்பனையில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்தவும் எமது ஒத்துழைப்பை வழங்கி, ஆவன செய்யவேண்டும்.

சமகால அரசினால் மக்களுக்கு உறுதிமொழிகளுக்கு மேல் உறுதி மொழிகள் வழங்கப்படுகின்றனவே தவிர, எவையும் செயற்படுத்தப்படவில்லை .

ஒற்றுமையாக ஒன்றிணைந்து தமிழர் உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டிய எம் தலைமைகள் சுயநலப் போக்குக் கொண்டவர்களாகப் பிளவுபட்டுள்ளமை ஓர் துர்ப்பாக்கிய நிலை. சமூக நலன் விரும்பிகளும், புத்திஜீவிகளும் தமிழ்த் தலைமைகளுக்குள் ஒற்றுமையைக் உருவாக்க முயலவேண்டியது கட்டாயத் தேவையாகும்- என்றுள்ளது. (அ)

## ஜனநாயகத்தை...

போன்றவர்கள் அன்று அதிகாரத்தில் இருந்தபோது தேர்தலைப் பற்றிப் பேசவில்லை. இன்று தமக்கு மக்கள் செல்வாக்கு இருப்பதாகக் காட்டிக்கொள்ள முற்படுவது நகைப்புக்குரியது.

அரசு தற்போது கடந்த கால ஆட்சியாளர்களால் ஏற்படுத்தப்பட்ட சீரழிவுகளையும், பொருளாதாரக் குழப்பங்களையும் சரிசெய்து கொண்டிருக்கின்றது. தேர்தலை நடத்துவதில் எங்களுக்கு எவ்வித அச்சமும் இல்லை. உரிய நடைமுறைகள் மற்றும் சட்டச் சிக்கல்கள் தீர்க்கப்பட்ட பின்னர், மாகாண சபைத் தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும். அப்போது மக்கள் யாருக்குப் பாடம் புகட்டுவார்கள் என்பதை ரோஹித போன்றவர்கள் நேரில் பார்ப்பார்கள். - என்றார். (அ)

## அரசியல்...

குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சர் மேலும் விளக்குகையில்: -

அரசியல் கைதிகள் உட்பட நீண்ட காலமாகச் சிறைகளில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.துரைராஜா தலைமையில் விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் எவ்வித இன, மத பாகுபாடுகளுமின்றி தமது விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அரசியல் கைதிகளின் தண்டனைக் காலத்தை நினைத்த மாத்திரத்தில் குறைப்பதற்கோ அல்லது அவர்களை உடனடியாக விடுவிப்பதற்கோ சட்ட ரீதியாகச் சில நடைமுறைகள் உள்ளன. எனவே, குறித்த குழு தனது பரிந்துரைகளையும் அறிக்கையையும் சமர்ப்பித்தவுடன், அதன் அடிப்படையில் தகுதியான கைதிகளை விடுவிக்க அல்லது தண்டனைக் குறைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சேவை செய்யக் கிடைக்கப்பெற்ற உன்னத பயிற்சியே சாரணியம்!

## பிரதமர் ஹரிணி பெருமிதம்


கொழும்பு, பெப். 23

தயார் நிலையில் இருப்பதற்கும், பிறருக்கு உதவுவதற்கும் - சேவை செய்வதற்கும் கிடைக்கப்பெற்ற ஒரு உன்னதமான பயிற்சியே சாரணியம் ஆகும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் லோர்ட் பேடன் பவல் பிரபுவின் 169 ஆவது பிறந்தநாள் மற்றும் உலகச் சாரணர் "சிந்தனை தினத்தை" முன்னிட்டு நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரிய இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சாரணர் தலைமையக வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது, அங்குள்ள பேடன் பவல் பிரபுவின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்திய பிரதமர், அங்கு உரையாற்றிய பிரதமர்,

"சாரணர் இயக்கம் என்பது வெறும் பதவிகளை வகிப்பதல்ல, அது தயார் நிலையில் இருப்பதற்கும், பிறருக்கு உதவுவதற்கும் - சேவை செய்வதற்கும் கிடைக்கப்பெறும் ஒரு உன்னதமான பயிற்சியாகும் என்று தெரிவித்தார்.





மேலும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அதே வேளை, பிறரை மதிக்கும், ஒழுக்கமான, புத்திசாலித்தனமான "ஸ்மார்ட்" சாரணர்களாகச் சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டிய தன் அவசியத்தையும் இதன்போது சுட்டிக்காட்டிய பிரதமர், மரம் நடுதல் மற்றும் நீர் நிலைகளைப் பாதுகாத்தல் போன்ற சூழல்நேயச் செயற்றிட்டங்கள் ஊடாக, பொறுப்புணர்வுடன் நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதில் பங்களிப்பு வழங்குமாறு சாரணர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில், சாரணர் டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தின் கீழ் சில மாவட்டங்களுக்கு அடையாள ரீதியாக மடிக்கணினிகளும், முதலுதவிப் பெட்டிகளும் வழங்கப்பட்டன. அத்துடன், இலங்கைச் சாரணர் சங்கத்தின் பிரதம சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி மனோஜ் நாணயக்காரவினால் பிரதமருக்கு விசேட சாரணர் முத்திரைத் தொகுப்பும் நினைவு உறையும் வழங்கப்பட்டது.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, சாரணர் சங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள் உட்பட நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வருகை தந்த பெருந்திரளான சாரணர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# வலி. கிழக்கில் அனுமதி இல்லாக் கட்டுமாணம் முறைப்பாடு செய்தும் பிரதேச சபை பராமுகம்!

கோப்பாய், பெப் 23

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஆளுகைக்கு உட்பட்ட கோண்டாவில் பழநி ஆண்டவர் வீதியில் பிரதேச சபையின் அனுமதி பெறப்படாமல் - வீதியை ஆக்கிரமிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத கட்டுமாணப் பணிகள் குறித்து பொது மக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் பிரதேச சபை பாராமுகமாகச் செயற்படுவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் புதிதாகக் காணியைக் கொள்வனவு செய்த ஒருவர் அனுமதிகள் எதுவுமின்றி கட்டுமாணப் பணிகளை மேற்கொள்வதுடன், பொதுப் போக்குவரத்து வீதி எல்லையைக் கடந்து நுழைவாயிலை அமைத்துள்ளதாகத் தெரிவித்தே பொது மக்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் விடுமுறை நாட்களில் மக் மும்முரமாக இக்கட்டுமாணப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும், பிரதேச சபை அதிகாரிகள் முறைப்பாடுகளைச் செவிமடுக்காமல் பாராமுகமாக நடந்து கொள்வதாகவும் அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# இந்திய அரசாங்கத்தின் உயர் கல்விக்கான புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம் கோரல்!

கொழும்பு, பெப். 23

இந்திய அரசாங்கத்தினால் வருடந்தோறும் வழங்கப்படும் உயர்கல்விக்கான புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இலங்கை மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக இந்திய கலாசார உறவுகளுக்கான பேரவை (ஐ. சி. சி. ஆர்) விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2026-27 கல்வியாண்டுக்கு ஐ. சி. சி. ஆர் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் சர்வதேச மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காகவே விண்ணப்பங்களை கோரப்பட்டுள்ளன.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் தகுதி பெறும் மாணவர்களுக்கு இந்தியாவின் பல்வேறு மத்திய மற்றும் மாநில பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. டிப்ளோமா, பட்டப்படிப்பு, பட்டப்பின் / முதுநிலைப் பட்டப்படிப்பு மற்றும் கலாநிதி பட்டப்படிப்பு ஆகிய பல்வேறு நிலைகளில் பயில்வதற்கான வாய்ப்பை இந்தப் புலமைப்பரிசில் திட்டம் வழங்குகிறது.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் இன்று திங்கட்கிழமை முதல் ஐ. சி. சி. ஆர் இணையத்தளமாகிய https://a2ascholarships.iccr.gov.in ( A2A - Admissions to Alumni Scholarship Portal) ஊடக விண்ணப்பிக்க முடியும்.

இந்த தளத்தின் மூலம் அனுமதி பெறக் கூடிய பல்கலைக்கழகங்கள், வழங்கப்படும் பாடத்திட்டங்கள் மற்றும் புலமைப்பரிசில் தொடர்பான அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள முடியும் என்றும் இத்திட்டம் தொடர்பான விரிவான தகவல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை கொழும்பிலுள்ள இலங்கைக்கான இந்தியத் தூதரகத்திலோ அல்லது கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள துணைத் தூதரகங்களிலோ அறிந்து கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவின் நிர்வாக உயர் பதவிகளில் அந்த மாவட்ட மாணவர்கள் அமரவேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் அறிவுரை

யாழ்ப்பாணம், பெப். 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாக உயர் பதவிகளை, இம்மாவட்டத்தைச் சேர்ந்த இன்றைய மாணவர்களே எதிர்காலத்தில் அலங்கரிக்க வேண்டும் எனவும், அதற்காகக் கல்வியுடன் மாத்திரமன்றி ஆளுமையையும் சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வலியுறுத்தினார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம், முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கும் அபிவிருத்திக்குமான நம்பிக்கை நிதியம் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க சங்கம் ஆகியவற்றின் இணைந்த ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட "பண்டார வன்னியன் நினைவு சதுரங்க மற்றும் பேச்சுப் போட்டி - 2025" இற்கான பரிசளிப்பு நிகழ்வு, நேற்று



ஞாயிற்றுக்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலுள்ள பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றிய ஆளுநர், இறுதிப் போரின் பின்னர் 2011ஆம் ஆண்டு மக்கள் மீள்குடியமர்ந்த நெருக்கடியான காலகட்டத்தில், பிள்ளைகளின் கல்வியைத் தொடர்வதில் மக்கள் எதிர்கொண்ட பெரும் சிரமங்களைப் போக்கும் வகையிலும், உதவ முன்வந்த புலம்பெயர் உறவுகள் மற்றும் கொடையாளர்களின் பங்களிப்புகளை முறையாக நெறிப்படுத்தும் பொறிமுறையாகவுமே இந்நிதியம் உருவாக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்நிதியத்தின் ஊடாக இதுவரை 903 மாணவர்கள் உதவிகளைப் பெற்றுள்ள நிலையில், பயனடைந்தவர்கள் எதிர்காலத்தில் சிறந்த வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும்போது அப்பணத்தை மீளச் செலுத்துவதன் ஊடாகவே நிதியத்தின் நிலைத்தன்மையை உறுதி செய்ய முடியும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய ஆளுநர், இந்து கலாசாரத் திணைக்களப் பணிப்பாளராக இருந்த காலத்திலிருந்தே மாவட்ட செயலர் உமாமகேஸ்வரனின் புத்தாக்கச் சிந்தனையையும் செயற்பாட்டுத் திறனையும் தான் நன்கு அறிவதாகவும், அந்நிதியத்தைப் பயன்படுத்தி மாணவர்களின் ஆளுமையை வளர்க்கும் இத்தகைய சிறப்பான நிகழ்வை முன்னெடுத்தமைக்குப் பாராட்டுகளையும் தெரிவித்தார். அத்துடன், கௌரவ விருந்தினரான பேராசிரியர் ராஜ்உமேஷ் குறிப்பிட்டதைப்போன்று, ஆளுமையற்ற கல்வியைக் கொண்டு உயர் பதவிகளை அடைபவர்களால் சமூகத்துக்கும் நாட்டுக்கும் எவ்வித பயனுமில்லை எனச் சாடிய ஆளுநர், அத்தகையவர்கள் உயர் பதவிகளில் அமர்ந்து சுற்றறிக்கைகளைக் காரணம் காட்டி பின்தங்கிய மக்களுக்கு உதவ முன்வர மாட்டார்கள் எனவும் கவலை வெளியிட்டார்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குக் கல்வியை மாத்திரமன்றி, மற்றவர்களுக்கு உதவும் இரக்கக் குணத்தையும் போதிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட ஆளுநர், ஆளுமையுடன் கூடிய முழுமையான கல்வியைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களே நாளை சிறந்த தலைவர்களாக மிளிர்வார்கள் எனவும், அதற்கு இந்நிகழ்வு ஒரு சிறந்த அடித்தளமாக அமையும் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார். (அ)

# யாழ். பல்கலையின் பட்டமளிப்பு வைபவம் நிறைவு நினைவுப் பேருரைகள் மார்ச் மாதம் ஐந்தாம் திகதி!

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் 40 ஆவது பொதுப் பட்ட மளிப் வைபவம் நேற்றுடன் நிறை வடைந்தது.

பல்கலைக்கழகத்தின் ஐந்தாவது வேந்தர், தகைசால் பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் கடந்த நான்கு நாள்க ளில் 12 அமர்வுகளாக நடைபெற்ற இந்தப் பட்டமளிப்பு விழாவில் 3 ஆயிரத்து 252 பேர் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்பட்டமளிப்பு வைபவத்தின் தொடர் நிகழ்வுகளாக அமையும் சேர். பொன் இராமநாதன் நினைவுப் பேருரை எதிர்வரும் மார்ச் 5ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கும், சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை அன்று பிற்பகல் 4.00 மணிக்கும் இடம்பெறவிருக்கின்றன

சேர். பொன் இராமநாதன் நினைவுப்பேருரையை ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழல் தொடர்பியல் துறையின் ஓய்வு பெற்ற துணைப் பேராசிரியர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா, "சமூக ஈடுபாட்டுடன் செயற்படும் பல்கலைக்கழகம்: ஆய்வு, உரையாடல் மற்றும் நீர்வளப் பாது காப்பு குறித்த ஆழ்ந்த சிந்தனைகள்" என்ற தலைப்பிலும்,

சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக மருத்துவபீடத் தின் குழந்தை மருத்துவத் துறை யைச் சேர்ந்த இருக்கைப் பேராசி ரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ் "அடுத்த தலைமுறையைப் பேணிப் பாதுகாப்பது: குழந்தைகள் ஆரோக்கியம் குறித்த சமகாலக் கண்ணோட்டங்கள்" என்ற தலைப்பிலும் நிகழ்த்தவிருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.